# மாலைக்கதிர்

Maalaikkathir

யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -
Yarl Muttram
Youtube Channel


சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 ஆவணி 21 வெள்ளிக்கிழமை 05.09.2025 கதிர 300

### அரசியல் கைதிகளின் விடுவிப்பை வலியுறுத்தி

# காசியில் இருந்து யாழ்ப்பாணம் எடுத்து வரப்பட்ட விடுதலை நீர்



யாழ்ப்பாணம், செப். 05

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி காசி உட்பட இந்தியாவின் பல தீர்த்தங்களில் இருந்து புனித நீர் எடுத்து வரப்பட்டு விடுதலை நீர் சேகரிப்பு பானையில் சேமிக்கப்பட்டது.

தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கு பகுதிகளில் கடந்த நாட்களில் விடுதலை நீர் சேகரிக்கப்பட்டது.

அந்தவகையில் அரசியல் கைதிகளின் விடுதலைக்கு வலுச் சேர்க்கும் வகையில் புலம்பெயர் தேசங்களில் இருந்தும் இந்த விடுதலை நீர் சேகரிப்பு இடம்பெற்று வருகின்றது.

7



## பஸ் விபத்தில் பலியானோர் எண்ணிக்கை 15 ஆக உயர்வு

பதுளை, செப். 05

பதுளை மாவட்டம், எல்ல -வெல்லவாய வீதியில் 24 ஆவது மைல்கல் அருகில் நேற்று இரவு இடம்பெற்ற பஸ் விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 15 ஆக அதிகரித்துள்ளது.

மேலும் 18 பேர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இறந்தவர்களில் 9 பெண்களும்,

7

## "பிரேக் செயலிழந்துள்ளது" என்று விபத்துக்கு சில நிமிடங்களுக்கு முன் பஸ் சாரதி கூறினார்

### உயிர் தப்பிய பயணி ஒருவர் அதிர்ச்சித் தகவல்

பதுளை, செப். 05

எல்ல - வெல்லவாய பிரதேசத்தில் நேற்று வியாழக்கிழமை இரவு இடம்பெற்ற கோர விபத்தில் உயிர் பிழைத்த நபர் ஒருவர்,

7



## பஸ் விபத்து தொடர்பில் நாம் மிகவும் வருத்தப்படுகின்றோம்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு



கொழும்பு, செப். 05

எல்ல பகுதியில் நடந்த துயரமான கோர பஸ் விபத்தில் உயிரிழந்த தங்காலை நகர சபை செயலாளர் உட்பட சகலரினதும் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு, காயமடைந்த அனைவரும்

7

## எல்ல பஸ் விபத்து: மஹிந்த கவலை!

கொழும்பு, செப். 05

எல்ல - வெல்லவாய வீதியில் இடம்பெற்ற பஸ் விபத்து குறித்து முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது கவலையை தெரிவித்துள்ளார்.

7



## காயமடைந்தவர்களில் எழுவர் ஆபத்தான நிலையில்!



பதுளை, செப். 05

எல்ல பஸ் விபத்தில் காயமடைந்தவர்களில் 7 பேர் ஆபத்தான நிலையில் இருக்கின்றனர் என்று பதுளை போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் பாலித ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஒருவர் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

நேற்று இரவு சில நோயாளிகளுக்கு அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அறுவைச் சிகிச்சைகளுக்குப் பின்னர் மேலும் ஒருவரை அல்லது இருவரை அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்க வேண்டியிருக்கும் என்றும் பதுளை போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

## இலங்கை தமிழர்கள் இந்தியாவில் சட்டப்பூர்வமாக தங்குவதற்கு இந்திய மத்திய அரசு அனுமதி!

இலங்கை தமிழர்கள் இந்தியாவில் சட்டப்பூர்வமாக தங்குவதற்கு இந்திய மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் இந்திய மத்திய தகவல் ஒலிபரப்பு மற்றும் பாராளுமன்ற விவகாரங்கள் தொடர்பான பிரதியமைச்சர் எல்.முருகன் தனது எக்ஸ் தள பக்கத்தில் பதிவொன்றையிட்டு தெரிவித்துள்ளார்.

அவரது பதிவில்,

இலங்கையில் நீண்ட காலமாக உள்நாட்டு போர் நீடித்து வந்ததால், உயிர் பிழைக்கவும், வாழ்வாதாரம் தேடியும் இலங்கை தமிழர்கள் ஆயிரக்கணக்கானோர் தமிழ்நாட்டில் அகதிகளாக தஞ்சம் அடைந்தனர்.

இவ்வாறு தமிழகத்தில் தஞ்சம் அடைந்தவர்கள் இலங்கை அகதிகள் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் இந்திய குடியுரிமை வழங்க வேண்டும் என கோரி வருகிறார்கள்.

இதற்கு முதல்படியாக, கடந்த 2015-ம் ஆண்டு ஜனவரி 9 ஆம் திகதிக்கு முன்னர் உரிய ஆவணங்கள் இன்றி இந்தியாவுக்குள் வந்த, அரசிடம் அகதிகளாக பதிவு செய்த இலங்கை தமிழர்கள் சட்டப்பூர்வமாக தங்குவதற்கு இந்திய மத்திய உள்துறை அமைச்சகம் கருணையுடன் அனுமதி அளித்துள்ளது.

இந்த வரலாற்று சிறப்புமிக்க நடவடிக்கையால் நமது இலங்கை தமிழ் சொந்தங்கள், இனி சட்ட நடவடிக்கையை எதிர்கொள்ள வேண்டிய அவசியம் இருக்காது.

இதற்காக பிரதமர் மோடிக்கும், இந்திய மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷாவுக்கும் தமிழக மக்களின் சார்பாக மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

## அதிக விலைக்கு அரிசி விற்பனை- நுகர்வோர் விவகார அதிகாரசபை முன்னெடுத்துள்ள கடும் நடவடிக்கை!

கொழும்பு, செப் .05

2025 ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஆகஸ்ட் மாதம் வரையில் நுகர்வோர் விவகார அதிகாரசபையால் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கையின் ஊடக நீதவான் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் மூலம் 211 மில்லியன் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

நுகர்வோர் விவகார அதிகாரசபையால் நாடு முழுவதும் 14,682 சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது அரிசி சந்தைகளில் 2,800 சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், அவற்றில் அதிக விலைக்கு அரிசி விற்பனை தொடர்பான 915 சோதனைகளும் அடங்கும்.

இந்த அரிசி சோதனை நடவடிக்கைகள் தொடர்பாக நீதிமன்றங்களால் 95 மில்லியன் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. அதிக விலைக்கு அரிசி விற்பனை செய்வது நுகர்வோர் விவகார அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் ஒரு கடுமையான குற்றமாவதுடன், குற்றவாளிகளுக்கு குறைந்தபட்சம் 100,000 ரூபாய் முதல் 500,000 ரூபாய் வரை அபராதம் அல்லது ஆறு மாதங்கள் சிறைத்தண்டனை அல்லது இரண்டும் விதிக்கப்படலாம்.

நிறுவனங்களுக்கு குறைந்தபட்ச அபராதம் 500,000 ரூபாய் ஆவதுடன், நீதிமன்றங்களால் 5 மில்லியன் ரூபாய் வரை அபராதம் விதிக்க அதிகாரம் உள்ளது.

அரிசி வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள அனைத்து தரப்பினர்களும் சட்டத்திற்கு இணங்கி வர்த்தமானி விலைகளைப் பராமரிக்க பொறுப்புடன் செயல்படுமாறு நுகர்வோர் விவகார அதிகாரசபை கோரியுள்ளது.

## காணாமல்போன 6,700 பேர் தொடர்பில் முதற்கட்ட விசாரணை நிறைவு

வலுக்கட்டாயமாக காணாமல் போனோர் வழக்குகள் தொடர்பில் முதற்கட்ட விசாரணைகளில் 6,700 பேரின் வழக்குகளை காணாமல் போனோர் அலுவலகம் நிறைவு செய்துள்ளது.

வலுக்கட்டாயமாக காணாமல் போனோரின் மொத்த எண்ணிக்கை 16,700 என்றும், பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நீதியை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளதாகவும் காணாமல் போனோர் அலுவலகத்தின் தலைவர் வழக்கறிஞர் மகேஷ் கட்டுலந்த குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஐந்து ஆண்டுகளில் வலுக்கட்டாயமாக காணாமல் போனோர் தொடர்பான சம்பவங்கள் எதுவும் பதிவாகவில்லை என்று அவர் வலியுறுத்தினார்.

மேலும் 10,000 வலுக்கட்டாயமாக காணாமல் போனோர் குறித்து விசாரிக்க ஒரு சிறப்பு திட்டம் நடந்து வருவதாக கட்டுலந்த மேலும் குறிப்பிட்டுள்ளார்.

SUHATHEHAM ATHULARSAALAI (PVT) LTD
சுகதேகம் ஆதுலர்சாலை (பீவீட) எல்டீடி
Neithal Beach city, Navatkuli, Jaffna
Company No- PV0031448

சித்த, ஆயுர்வேத, மேற்கத்ய இணைந்த மருத்துவ சேவை

Opening Hours - 9.00 am - 5.00 pm
Monday - Saturday

Treatment for Following Diseases
- Joint disorders சகல விதமான மூட்டுவாதங்கள்
- Paralysis பாரிசவாதம்
- Skin diseases தோல் நோய்கள்
- obesity உடற்பருமன்
- Gynecological problems - பெண்ணியல் நோய்கள்
- A norectal diseases மூல வருத்தம்
- Diabetic Mellitus நீரிழிவு
- Diabetic foot ulcers - நீரிழிவு புண்கள்
- Vericose vein Kidney stone சிறுநீரககல்
- Hypertension உயர்குருதியமுக்கம்
- cholesterol கொலஸ்திரோல்
- GGIT disorders சமிபாட்டுத் தொகுதியுடன் தொடர்பான நோய்கள்

இலவச மருத்துவ முகாம்
* போயா தினங்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை நடைபெறும்.
* இலவசமாக குருதியமுக்கம் நிறை, உயரம், உடற்திணிவுச்சுட்டி என்பவற்றை அளவிட முடியும்

Special Treatments
- Full body Therapy
- Head Massage
- Foot Massage -
- Herbal Medicated Bath
- Decoction Bath
- Shirod hara
- skin care therapy
- Nasya
- wellness treatment through yoga & counselling
- Leech Therapy

அனைத்து விதமான குழந்தைகளுக்கான மூலிகைத் தாவரங்கள், கோரோசனை மாத்திரைகள், கிரந்தி எண்ணை என்பனவற்றை இங்கு பெற்றுக்கொள்ளலாம்

Other activities ஏனைய சேவைகள்
Nursery Garden -
Medicinal Plants (மூலிகை தாவரங்கள்)
Medicinal leach (லீச் அட்டை வளர்ப்பு)

Neithal Beach city
Amman Kovil Road,
Navatkuli Jafina

Contact No-0762942218

# மன்னார் தீவுக்குள் காற்றாலை வேண்டாம்!



மன்னார, செப் .05

மன்னார் தீவு பகுதியில் புதிதாக அமைக்கப்படவுள்ள காற்றாலை மின் கோபுரங்கள் தொடர்பாக குறித்த பகுதி மக்களுடன் கலந்துரையாட எரிசக்தி அமைச்சர் பொறியியலாளர் குமார ஜெயக்கொடி தலைமையிலான குழுவினர் இன்று (05) காலை மன்னாரிற்கு வருகை தந்தனர்.

மன்னார் நகர பிரதேச செயலாளர் பிரிவில் சௌத்பார் பகுதியில் 2 காற்றாலை கோபுரங்களும், தாழ்வு பாட்டில் 2 காற்றாலை கோபுரங்களும், தோட்டவெளியில் 2 காற்றாலை கோபுரங்களும் அமைக்கப்படவுள்ளது.

குறித்த 5 காற்றாலை கோபுரங்களும், 20 மெகா வாட் கொண்டதாக அமைக்கப்படவுள்ளது.மேலும் ஓலைத்தொடுவாய் பகுதியில் 06 காற்றாலை மின் கோபுரங்களும், பேசாலை மேற்கில் 2 காற்றாலை மின் கோபுரங்களும் அமைக்கப்படவுள்ளது.குறித்த 8 காற்றாலை மின் கோபுரங்களும் 50 மெகா வாட் கொண்டதாக அமைக்கப்படவுள்ளது.

இந்த நிலையில் குறித்த 5 கிராமங்களிலும் முன்னெடுக்கப்படவுள்ள காற்றாலை மின் கோபுரங்கள் அமைப்பது குறித்து குறித்த கிராம மக்களின் கருத்துக்களை கேட்டறிய எரிசக்தி அமைச்சர் பொறியியலாளர் குமார ஜெயக்கொடி தலைமையிலான குழுவினர் மன்னாரிற்கு விஜயம் செய்த நிலையில் இன்று காலை 10 மணி அளவில் முதலாவது கலந்துரையாடல் மன்னார் சாந்திபுரம் ,சௌத்பார் கிராமங்களை உள்ளடக்கி சாந்திபுரம் மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன் போது அமைச்சருடன் அதிகாரிகள் வருகை தந்தனர்.

மேலும், பாராளுமன்ற உறுப்பினர்களான காதர் மஸ்தான், து.ரவிகரன், ஜெகதீஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டதோடு, மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன், உதவி அரசாங்க அதிபர் எம். பிரதீப்,மன்னார் நகர பிரதேச செயலாளர் கா.காந்தீபன், மன்னார் நகர சபையின் தவிசாளர் டானியல் வசந்தன்,அழைக்கப்பட்ட திணைக்கள பிரதி நிதிகள், கிராம மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது அமைச்சர் உள்ளிட்ட குழுவினர் மக்களுடன் கலந்துரையாடிய போதும் மக்கள் தமது கிராமங்களுக்குள் புதிதாக அமைக்கப்படவுள்ள காற்றாலை மின் கோபுரங்கள் தேவை இல்லை எனவும் குறித்த காற்றாலை மின் கோபுரங்களை அமைக்க தாம் எதிர்ப்பு தெரிவிப்பதாக தெரிவித்தனர்.

மேலும் மன்னார் தீவில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள 30 காற்றாலை மின் கோபுரங்களால் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருவதாகவும், மீனவர்கள் தொழிலை இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டினர்.

மேலும் தமது கிராம மக்கள் நிம்மதியாக வாழ வேண்டுமாக இருந்தால் காற்றாலை கோபுரங்களை மன்னார் தீவில் இருந்து அப்புறப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்ததோடு, எமது பகுதிக்குள் காற்றாலை அமைக்க ஒரு போதும் அனுமதி வழங்க மாட்டோம்.

எனினும் அமைச்சர் தலைமையிலான குழுவினர் மக்களுடன் கலந்துரையாடி தமக்கு சாதகமான பதிலை எதிர்பார்க்க முயற்சி செய்த போதும் கலந்து கொண்ட அனைத்து மக்களும் தமது பகுதிக்குள் காற்றாலை வேண்டாம், அமைக்க அனுமதி வழங்க மாட்டோம் என ஒருமித்து தெரிவித்தனர்.

இந்நிலையில் அமைச்சர் தலைமையிலான குழுவினர் அங்கிருந்து வெளியேறினர். குறித்த கலந்துரையாடல் குறித்து ஊடகவியலாளர்கள் அமைச்சரிடம் கருத்து கேட்ட போதும் எவ்வித பதிலும் வழங்காது அங்கிருந்து வெளியேறினர். (ஐ)

# இலங்கை – இத்தாலி இடையிலான முதல்சுற்று அரசியல் கூட்டம் வெற்றிகரமாக நிறைவு







இலங்கைக்கும், இத்தாலிக்கும் இடையிலான முதல்சுற்று அரசியல் ஆலோசனை கூட்டம் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளது.

நாட்டிற்கு வருகை தந்துள்ள இத்தாலியின் பிரதி வெளிவிவகார அமைச்சர் மரியா த்ரிபோட்டிக்கும், இலங்கையின் வெளிவிவகார பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திரவிற்கும் இடையில் இந்த ஆலோசனைக் கூட்டம் நேற்று நடைபெற்றது.

அரசியல்ஆலோசனை பொறிமுறையை நிறுவுவது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தமும் இதன்போது கைச்சாத்திடப்பட்டதாக வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பத்து வருடங்களின் பின்னர் இத்தாலியின் உயர்மட்ட பிரமுகர் ஒருவர் நாட்டிற்கு வருகை தந்துள்ள முதலாவது சந்தர்ப்பம் இதுவென்பதும் குறிப்பிடத்தக்கது.

# பத்மேவின் போதைப்பொருள் தொழிற்சாலையை செயற்படுத்த 2 பாகிஸ்தான் நாட்டவர்கள்

பாதாள உலகக் குழுவின் தலைவர் கெஹெல்பத்தர பத்மேவினால் நுவரெலியாவில் நடத்தப்பட்ட போதைப்பொருள் தொழிற்சாலையை செயற்படுத்துவதில், இரண்டு பாகிஸ்தான் நாட்டவர்கள் ஈடுபட்டிருந்ததாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, குறித்த போதைப் பொருள் தொழிற்சாலையை செயற்படுத்துவதற்காக வெளிநாட்டவர்களை, ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்களில்ஈடுபடும்குழுவினர்நாட்டிற்கு வரவழைத்துள்ளதாக அமைச்சர் கூறியுள்ளார்.

கெஹெல்பத்தர பத்மேவினால் முதலீடு செய்யப்பட்டதாக கூறப்படும் குறித்த போதைப்பொருள் தொழிற்சாலை தொடர்பில் குற்றப் புலனாய்வு திணைக்களத்தினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். அதற்கமைய, குறித்த போதைப் பொருள் தொழிற்சாலைக்கு 40 இலட்சம் ரூபாய் பணத்தை முதலிட்டுள்ளமையை கெஹெல்பத்தர பத்மே ஒப்புக்கொண்டுள்ளதாக காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

நுவரெலியாவில் உள்ள வீடொன்றை வாடகைக்கு பெற்றுக் கொண்டுள்ளதுடன், இரண்டாயிரம் கிலோகிராமிற்கும் அதிக இரசாயனங்கள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாகவும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால குறிப்பிட்டுள்ளார்.

# கந்தளாயில் துப்பாக்கியுடன் இருவர் கைது!

கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் சட்டவிரோதமாக கைத்துப்பாக்கி வைத்திருந்த குற்றச்சாட்டின் தொழிலதிபரும் அவரது வாகன சாரதியும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

119 அவசர பொலிஸ் பிரிவுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில், கந்தளாய் பொலிஸ் குழு தொழிலதிபரின் வீட்டில் சோதனை நடத்தியது. விசாரணையில், கைத்துப்பாக்கி அவரது சாரதியின் வீட்டில் இருப்பது தெரியவந்தது.

அதனைத் தொடர்ந்து தம்பலகாமம் பகுதியில் உள்ள சாரதியின் வீட்டில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் ஒரு ரிவால்வர் மற்றும் நான்கு தோட்டாக்கள் மீட்கப்பட்டன.

பின்னர் தொழிலதிபரின் கந்தளாய் வீட்டைச் சோதனை செய்தபோது, 66 பழைய தோட்டாக்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்தன. சந்தேக நபர்கள் துப்பாக்கி மற்றும் தோட்டாக்களுடன் கந்தளாய் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். நீதிவான், இருவரையும் 48 மணித்தியாலங்கள் தடுப்புக் காவலில் வைத்து விசாரிக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

# துரோகம் தலைவிரித்து ஆடுகிறது.. பழனிசாமியை அமமுக தொண்டர்கள் ஏற்க மாட்டார்கள் :டிடிவி தினகரன் காட்டம்



துரோகம்தலைவிரித்து ஆடுகிறது.. எடப்பாடி பழனிசாமியை அமமுக தொண்டர்கள் ஏற்க மாட்டார்கள் என்று அமமுக பொதுச் செயலாளர் டிடிவி தினகரன் தெரிவித்துள்ளார். அதிமுக-பாஜக கூட்டணி அமைந்த பின் தமிழகத்திற்கு வந்த பிரதமர் மோடி மற்றும் அமித்ஷாவை சந்திக்க ஓபிஎஸ் மற்றும் டி.டி.வி.தினகரன் நேரம் கேட்டிருந்தனர். ஆனால் நேரம் ஒதுக்கப்படவில்லை. எடப்பாடிக்கு மட்டும் பிரதமர் மோடி, அமித்ஷாவை சந்திக்க நேரம் ஒதுக்கப்பட்டது. அதேபோல தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் நடைபெறும் எந்த ஒரு நிகழ்ச்சிக்கும் ஓபிஎஸ் மற்றும் டி.டி.வி.தினகரனுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. இதனால் கடும் விரக்தியடைந்த ஓபிஎஸ், தனக்கு சுயமரியாதை முக்கியம் என்று கூறி தேசிய ஜனநாயக கூட்டணியில் இருந்து வெளியேறுவதாக அறிவித்தார். இதே போல், ஓபிஎஸ்சை தொடர்ந்து பாஜ கூட்டணியில் இருந்து அமமுக விலகுவதாக டிடிவி தினகரனும் அறிவித்தள்ளார்.

இந்த நிலையில், செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்த அவர்," எடப்பாடி பழனிசாமி திருந்துவார் என நம்பினோம். ஆனால் அது நடப்பதாகத் தெரியவில்லை. துரோகம் தலைவிரித்து ஆடுகிறது. தான் துரோகம் செய்தது சரி என்பது போல ஊர் முழுக்கச் சென்று ஆணவத்துடன் பேசி வருகிறார். அம்மாவின் தொண்டர்கள் இணைந்து 'சரியான முதலமைச்சர் வேட்பாளரை' தருவார்கள் என இத்தனை காலம் பொறுமையாக இருந்தோம். அதற்கு வாய்ப்பில்லை எனத் தெரிந்துவிட்டது. அதனால்தான் நாங்கள் எங்கள் வழியில் செல்கிறோம். அமமுக தொண்டர்கள் இபிஎஸ்-ஐ ஒருபோதும் ஏற்க மாட்டார்கள். "இவ்வாறு தெரிவித்தார். (ஐ)

## 60 ஆண்டுகளுக்கு பிறகு ஆபாய அளவை தாண்டிய யமுனை ஆறு: கரையோர மக்களுக்கு வெள்ள எச்சரிக்கை!




: டெல்லியில் தொடர் பலத்த மழை காரணமாக யமுனை ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. டெல்லி, அரியானாவில் கடந்த சில நாட்களாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதனால் யமுனை ஆற்றின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. யமுனை ஆற்றின் நீர்மட்டம் அபாய அளவான 205.33 மீட்டரை தாண்டி 207.4 மீட்டராக அதிகரித்துள்ளது. இதனால் நதியின் அபாய அளவை தாண்டி வெள்ளம்பெருக்கெடுத்து ஓடுகிறது. இதையடுத்து கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

டெல்லி ரிங் ரோடு, சிவில் லைன்ஸ், பேலா சாலை, சோனியா விஹார், யமுனா பஜார், அக்சர்தாம் கோயில் பகுதிகளை வெள்ளம் சூழ்ந்தது. இதனால் யமுனை கரையோரம் வசிக்கும் 12,000 மக்கள் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். மேலும், யமுனை கரை மெட்ரோ ரயில் நிலையம் செல்லும் சாலை வெள்ளத்தால் துண்டிக்கப்பட்டுள்ளது. டெல்லி யமுனை ஆற்றின் நீர்மட்டம் 60 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு 207.4 மீட்டராக உயர்ந்துள்ளது. இதற்கு முன் 1963ம் ஆண்டு யமுனை ஆற்றின் நீர்மட்டம் 207 அடிக்கு உயர்ந்திருந்தது குறிப்பிடத்தக்கது. (ஐ)



## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஜம்மு, இமாச்சல், பஞ்சாப், உத்தரகாண்டிற்கு சிறப்பு நிவாரண நிதி: பிரதமர் மோடிக்கு ராகுல் கோரிக்கை

வெள்ளத்தால் பெரும் பேரழிவை சந்தித்துள்ள ஜம்மு காஷ்மீர், இமாச்சலப்பிரதேசம், பஞ்சாப், உத்தரகாண்ட் மாநிலத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிறப்பு நிவாரணத் தொகை வழங்க வேண்டும் என்று பிரதமர் மோடியை மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல்காந்தி கேட்டுக்கொண்டுள்ளார்.

மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல்காந்தி தனது எக்ஸ் தள பதிவில்,"மோடி ஜீ வெள்ளம் பஞ்சாபில் பெரும் அழிவை ஏற்படுத்தி உள்ளது. ஜம்மு காஷ்மீர், இமாச்சலப்பிரதேசம், உத்தரகாண்ட் மாநிலங்களின் நிலைமையும் மிகவும் கவலையளிக்கிறது. இதுபோன்ற கடினமான காலங்களில் உங்கள் கவனமும் ஒன்றிய அரசின் தீவிர உதவியும் மிகவும் அவசியமாகும். ஆயிரக்கணக்கான குடும்பங்கள் தங்களது வீடுகள், அன்புக்குரியவர்கள், கால்நடைகளை காப்பாற்ற போராடி வருகிறார்கள். இந்த மாநிலங்களுக்கு குறிப்பாக விவசாயிகளுக்கு உடனடியாக ஒரு சிறப்பு நிவாரணத் தொகை அறிவிக்கப்பட வேண்டும். மேலும் நிவாரணம் மற்றும் மீட்பு நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட வேண்டும்" என்று குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# தமிழக பா.ஜ., கோஷ்டிகளுக்கு அமித் ஷா எச்சரிக்கை!



'கட்சியில் தனித்தனி கோஷ்டிகளாக செயல்பட கூடாது வரும் சட்டசபை தேர்தலில், பா.ஜ., போட்டியிடும் அனைத்து இடங்களிலும் வெற்றி பெற வேண்டும்' என, தமிழக பா.ஜ., நிர்வாகிகளை, மத்திய அமைச்சர் அமித் ஷா எச்சரித்துள்ளார்.

தமிழக சட்டசபை தேர்தலுக்கு இன்னும் ஏழு மாதங்களே உள்ள நிலையில், மத்திய அமைச்சர் அமித் ஷா, டில்லியில் தன் வீட்டில், தமிழக பா.ஜ., நிர்வாகிகளுடன் நேற்று ஆலோசனை நடத்தினார். இதில், பா.ஜ., தேசிய அமைப்பு பொதுச்செயலர் சந்தோஷ், மத்திய அமைச்சர் முருகன், தமிழக பா.ஜ., தலைவர் நாகேந்திரன், மூத்த நிர்வாகிகள் பொன்.ராதாகிருஷ்ணன், தமிழிசை, வானதி, மேலிட பொறுப்பாளர் அரவிந்த் மேனன், இணை பொறுப்பாளர் சுதாகர் ரெட்டி, தமிழக அமைப்பு பொதுச் செயலர் கேசவவிநாயகன் ஆகியோர் பங்கேற்றனர்.

இரண்டு மணி நேரத்திற்கு மேல் நடந்த கூட்டத்தில், தமிழகத்தில் கூட்டணியை பலப்படுத்த எடுக்க வேண்டிய நடவடிக்கைகள், பா.ஜ., போட்டியிடும் தொகுதிகள் உள்ளிட்டவை குறித்து விரிவாக ஆலோசிக்கப்பட்டு உள்ளது. அ.தி.மு.க., கூட்டணியில் இணைந்தும் தேசிய ஜனநாயக கூட்டணிக்கு வர, தே.மு.தி.க., -பா.ம.க., தயக்கம் காட்டுகின்றன. கடந்த ஜூலையில் தமிழகம் வந்த பிரதமர் மோடியை சந்திக்க அனுமதி தராததால், தேசிய ஜனநாயக கூட்டணியில் இருந்து விலகுவதாக பன்னீர்செல்வம் அறிவித்துள்ளார்ர். இவரது முடிவையே பின்பற்றும் வகையில் அ.ம.மு.க., தினகரனின் செயல்பாடு உள்ளது. எனவே, கூட்டணியை பலப்படுத்த வேண்டியவை தொடர்பாக, பா.ஜ., நிர்வாகிகளிடம் அமித் ஷா கருத்துக்களை கேட்டார்.

பன்னீர்செல்வத்தை மீண்டும் கூட்டணியில் சேர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். பா.ஜ.,வில் உட்கட்சி பூசல் அதிகரித்து வரும் தகவல் கிடைத்துள்ளது. தனிநபரின் வளர்ச்சி கட்சிக்கு முக்கியமல்ல. கட்சியின் வளர்ச்சி தான் மேலிடத்துக்கு வேண்டும். தமிழக பா.ஜ., நிர்வாகிகளின் செயல்பாடுகளை, மேலிடம் உன்னிப்பாக கண்காணித்து வருகிறது. கட்சி வளர்ச்சிக்கு கோஷ்டி பூசல் அதிகரிப்பது சரியில்லை. நிர்வாகிகள் அனைவரும் தங்களுக்கு என்று தனி கோஷ்டிகளை உருவாக்கி செயல்பட கூடாது.

தங்களுக்கு இடையே நிலவும் கருத்து வேறுபாடுகளை களைந்து, ஒற்றுமையுடன் செயல்பட வேண்டும். மத்திய அரசின் திட்டங்களை மக்களிடம் சேர்க்க, தமிழகத்திற்கு மத்திய அமைச்சர்கள் தொடர்ந்து அனுப்பப்படுவர். அவர்களை, மாவட்ட வாரியாக அழைத்து சென்று, கட்சி வளர்ச்சி பணி, நலத்திட்ட உதவிகள், மத்திய அரசின் திட்டங்களை துவக்கி வைத்தல் போன்ற பணிகளில் ஈடுபட வேண்டும். இவ்வாறு அவர் கூறியுள்ளார். (ஐ)

# வீர மங்கை

# வேலு நாச்சியார்



1730ஆம் ஆண்டு, இராமநாதபுரம் அருகில் உள்ள சக்கந்தி என்னும் ஊரில், முத்து விஜயரகுநாதசெல்லத்துரை சேதுபதி (இராமநாதபுர மன்னர்) - முத்தாத்தாளுக்கு ஒரே பெண் மகளாகப் பிறந்தார் வேலுநாச்சியார். பெண் எனினும் ஆண் வாரிசு போலவே வளர்க்கப்பட்டார்.

வாள்வீச்சு, அம்பு விடுதல், ஈட்டி எறிதல், குதிரையேற்றம், யானையேற்றம் என்று எல்லா போர்க் கலைகளையும் கற்றார் பல மொழிகள் கற்றார். 1746ல் சிவகங்கை மன்னர் முத்துவடுகநாதருக்கு மனைவியாகி சிவகங்கைக்கு குடிபுகுந்தார்.

சிவகங்கை சீமை சீரும் சிறப்புமான சீமை. அதை சீர்குலைக்க வந்தது ஒரு சிக்கல். ஆற்காடு நவாப்பின் பெரும்படை ஒன்று இராமநாதபுரத்தைத் தாக்கி கைப்பற்றியது. நவாபின் அடுத்த குறி சிவகங்கைதான். ஆசைப்பட்ட இடங்களை அடையாமல் விட்டதில்லை நவாப். நேரம் பார்த்து நெருங்குவான். நெருக்குவான். கழுத்தை நெரித்துவிடுவான்.

சிவகங்கை மன்னர் முத்துவடுமுகநாதரும் லேசுபட்டவர் அல்ல. போர்க்கலைகள் தெரிந்தவர். வீரம் செறிந்தவர். விவேகம் பொதிந்தவர். முத்துவடுக நாதரின் மனைவியான வேலு நாச்சியார் வீரனுக்கு ஏற்ற வீராங்கனையாகத் திகழ்ந்தார். இவர்களுக்கு உறுதுணையாக போர்ப்படை தளபதிகளாக சின்ன மருது, பெரிய மருது சகோதரர்கள். வீரத்துக்கு பெயர் பெற்றவர்கள்.



நேரம் பார்த்துக் கொண்டிருந்த நவாப்புக்கு ஒரு அரிய வாய்ப்பு கிடைத்தது. சிவகங்கையைத் தாக்க ஆங்கிலேயேப் படைகள் நவாப்புக்கு உதவ முன்வந்தன. அவர்களிடம் நவீனரக ஆயுதங்கள் இருந்தன. அவற்றைக் கொண்டு சிவகங்கையைத் தாக்கி தன் கட்டுக்குள் கொண்டுவரத் திட்டமிட்டான் நவாப். ஒரு முறை மன்னர் முத்து வடுகநாதர் காளையர் கோயிலில் வழிபாடு செய்து கொண்டிருந்தபோது நவாபின் படைகள் காளையர் கோயிலைச் சுற்றி வளைத்தனர். கொடூரமாய் தாக்கினர்.

ஆங்கிலேயர் கொடுத்த போர்ச்



சாதனங்களைக் கொண்டு தாக்கினர். வடுகநாதரும் அவரது படைகளும் வீரப்போர் புரிந்தனர். இருந்தும் அவர்களால் அந்தத் தாக்குதலைச் சமாளிக்க இயலவில்லை. வடுகநாதர் வாளால் வெட்டப்பட்டு இறந்தார் இளவரசியும் கொல்லப்பட்டார். காளையர் கோயில் கோட்டை நவாப்படைகளின் வசமாகியது.

திடீர் தாக்குதலில் கோட்டை வீழ்ந்து மன்னர் இறந்துவிட்டார் என்ற செய்தி வேலு நாச்சியாருக்கு எட்டியது. கதறி அழுதார். கணவரின் உடலைப் பார்க்க வேண்டும் என்று துடித்தார். தானிருந்த இடத்திலிருந்து காளையர் கோயிலுக்குச் செல்ல விரும்பினார். இந்தச் சமயத்தில் நாச்சியாரைக் கைது செய்ய படை ஒன்றை அனுப்பினான் நவாப். அந்தப் படை வேலு நாச்சியாரை வழியிலேயே மடக்கியது. ஆனால் நாச்சியார் மடங்கவில்லை. ஆவேசத்துடன் போரிட்டார். எதிரிப்படைகளை சிதறி ஓடச் செய்தார்.

இறந்த கணவரை சென்று பார்த்துவிட வேண்டுமென்பதுதான் அவரது ஒரே இலக்காயிருந்தது. ஆனால் தளபதிகளாயிருந்த மருது சகோதரர்கள் அவருக்கு வேறு ஆலோசனை வழங்கினார்கள். ‘கோட்டை வீழ்ந்துவிட்டது. அரசர் இறந்துவிட்டார். நீங்களும் போய் சிக்கிவிட்டால் நம்மால் நவாபை பழிவாங்கமுடியாது. நாட்டைக்கைப்பற்றவும் நாட்டின் பெருமையைக் காப்பாற்றவும் நீங்கள் வாழ்ந்தாக வேண்டும். அதனால் அங்கே போகக் கூடாது’ என்றார்கள். ஆனால் நாச்சியார் கேட்கவில்லை. கணவரின் உடலைக் காண காளையர் கோயில் சென்றார். இதற்குள் நவாப் கூட்டமும் ஆங்கிலேயப் படைகளும் சிவகங்கைக்குள் நுழைந்துவிட்டன.

வேலு நாச்சியார் காளையர் கோயிலில் கண்ட காட்சி கொடூரமானது. எங்கெங்கும் பிணக் குவியல். கோயில் திடலின் நடுவே அரசரும் இளையராணியும் ரத்தம் வடிந்து கிடந்தார்கள். காணக் கூடாத காட்சி அது. கதறி அழுதார் நாச்சியார். கணவருடன் உடன்கட்டை ஏறிவிடலாமா என்று கூட யோசித்தார். ஆனால் கணவனைக் கொன்ற கயவர்களைப் பழிவாங்காமல் சாவதா? அந்த வீரமங்கைக்கு அது இயலாத காரியம்.

பல்லக்கு ஒன்றில் ஏறி மருது சகோதரர்களின் பாதுகாப்போடு சிவகங்கையிலிருந்து தப்பிச் சென்றார். விடிய விடிய குதிரையில் பயணம் செய்து மேலூர் சென்றார்கள். வேலு நாச்சியார் வீரத்தில் மட்டுமல்ல, விவேகத்திலும் கெட்டி. நவாபையும் ஆங்கிலேயர் படையினரையும் வீழ்த்த மன்னர் ஹைதர் அலி உதவியை நாடுவது என்று தீர்மானித்தார். ஏனென்றால் ஆங்கிலேயருக்கும் நவாப்புக்கும் பரம எதிரி ஹைதர் அலி.

தான் ஒளிந்திருந்த காடுகளிலிருந்து ஹைதர் அலிக்கு உதவி கேட்டு கடிதம் எழுதினார். அப்போது ஹைதர் அலி திண்டுக்கல்லிலிருந்தார். கடிதங்களை ஹைதர் அலியின் அரண்மனையின் முன்பு மூன்று குதிரை வீரர்கள் வந்து நின்றார்கள். வேலு நாச்சியாரிடமிருந்து வருவதாகச் சொன்னார்கள். ஹைதர் அலி அவர்களை உள்ளே வரவழைத்தான். ‘வேலு நாச்சியார் வரவில்லையா?” என்று ஹைதர் அலி கேட்க, தன் தலைப்பாகையை கழற்றினான், ஒரு வீரன். அது வேலு நாச்சியார். ஹைதர் அலியுடன் உருது மொழியை சரளமாகப் பேச அவருக்கு மேலும் ஆச்சர்யம். தன் வேதனைகளையும் இலட்சியத்தையும் ஹைதர் அலியிடம் விளக்கினார் வேலுநாச்சியார். அவரிடமிருந்த வீரத்தைக் கண்ட ஹைதர் அலி தன்னுடைய கோட்டையிலேயே தங்கிக் கொள்ள அனுமதி தந்தார்.

வேலு நாச்சியார் தனக்கு வேண்டிய பணிப் பெண்களுடனும், வீரர்களுடனும், ஏழு ஆண்டுகள் விருப்பாட்சி கோட்டை, திண்டுக்கல் கோட்டை என மாறி மாறி தங்கினார். அங்கிருந்து தனது போர்ப் படைகளைப் பெருக்கத் துவங்கினர். வேலு நாச்சியாரின் லட்சியம் ஆங்கிலேயப் படையை அழிப்பது, நவாபை வீழ்த்துவது. சிவகெங்கை சீமையில் தனது பரம்பரை சின்னமான அனுமன் கொடியை பறக்க விடுவது. அதற்கான நாளும் வந்தது.

ஹைதர் அலி தந்த நவீன ரக ஆயுதங்களுடன் நவாப்படைகளுடன் போர் செய்யக் கிளம்பினார் வேலு நாச்சியார். முதலில் காளையர் கோயிலைக் கைப்பற்றினார். சிவகங்கையிலும் திருப்பத்தூரிலும் நவாப்பின் படைகளும் ஆங்கிலப் படைகளும் பரவி நின்றன. அவற்றைத் தோற்கடித்தால்தான் சிவகங்கையை மீட்க முடியும். வேலு நாச்சியார் தனது படைகளை இரண்டாகப் பிரித்து ஒரு படைக்கு சின்ன மருதை தளபதியாகவும், இன்னொரு படைக்கு பெரிய மருதுவுடன் இணைந்து வேலு நாச்சியார் தலைமை வகித்தார்.

சின்னமருது தலைமையிலான படை திருப்பத்தூரில் இருந்த வெள்ளையர் படைகளை வீழ்த்தியது. விஜயதசமி அன்று சிவகெங்கை அரண்மனைக்குள்ளே இருக்கும் ராஜராஜேஸ்வரி தெய்வத்தை கூட்டம், கூட்டமாக பெண்கள் சென்று வழிபடுவது வழக்கம். வெளியே ஆங்கிலேயர் படை காவல் காத்துக் கொண்டிருக்கும். வேலுநாச்சியாரும், அவரோடு இருந்த பெண்கள் படையும், ஆயுதங்களை ஆடைக்குள் மறைத்துக் கொண்டு கூட்டத்தோடு கூட்டமாக அரண்மனைக்குள் உள்ளே இருந்த கோவிலுக்குள் சென்று திடீர் தாக்குதல் நடத்தியது. இதை ஆங்கிலேயப் படைகள் எதிர்பார்க்கவில்லை. வெட்டுண்டு விழுந்தார்கள். பிழைத்தவர்கள் நாட்டைவிட்டு ஓடினார்கள்.

சிவகங்கை கோட்டை மீது பறந்த ஆங்கிலேயரின் கொடி இறக்கப்பட்டது. வேலு நாச்சியாரின் அனுமன் கொடி ஏற்றப்பட்டது. அவரது சபதம் நிறைவேறியது. வேலு நாச்சியார் சிவகங்கையின் அரசியானார். அவருடைய காலம் வீரத்தின் காலமாக இருந்தது. தனது அறுபத்தாறாவது வயதில் இறந்தார், வேலு நாச்சியார். அவரது வாழ்க்கை தமிழ் மண்ணின் வீரத்துக்கு சாட்சியாக இன்றும் இருக்கிறது.

நல்ல தலைவனுக்கு அழகு இக்கட்டான சூழ்நிலையில் நிதானமாய் இருந்து முடிவுகள் எடுப்பது. அதை மிகச்சரியாக செய்தவர் வேலுநாச்சியார். அது மட்டுமன்றி தன் காலத்திற்கு பிறகு நாட்டை ஆள மிகச்சரியான தலைவர்களாக மருது சகோதரர்களை தேர்ந்தெடுத்தார்.

வேலுநாச்சியாரின் விவேகத்துடன் கூடிய வீரமே அவருக்கு வெற்றியைத் தந்தது.

பெரும் போராட்டங்களை நடத்தி நாட்டை மீட்ட வேலுநாச்சியார் 25 டிசம்பர் 1796 அன்று இறந்தார்.

நம் வரலாறு புத்தகம் மறந்துவிட்ட வீர வரலாறையெல்லாம் ஒவ்வொன்றாய் மீட்டெடுப்போம்.....

# நைஜீரியாவில் சோகம் படகு மூழ்கியதில் 60 பேர் பரிதாப பலி

வடக்கு மத்திய நைஜீரியாவில் 80 பேரை ஏற்றிச் சென்ற படகு மூழ்கியதில் 60 பேர் உயிரிழந்தனர்.

நைஜீரியாவில், குறிப்பாக மழைக்காலங்களில் படகு விபத்துக்கள் அடிக்கடி நிகழ்கின்றன. ஆனாலும் அந்த நாட்டு மக்களுக்கு படகு போக்குவரத்து தான் முக்கியத்துவமாக வாய்ந்ததாக இருக்கிறது. நைஜீரியாவின் வட-மத்திய நைஜர் மாநிலத்தில் பயணிகள் 80 பேரை ஏற்றிச் சென்ற படகு விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் 60 பேர் உயிரிழந்தனர். மேலும் 15க்கும் மேற்பட்டோர் மீட்கப்பட்டனர் என உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்தனர். மலாலே மாவட்டத்தில் உள்ள துங்கன் சுலேவிலிருந்து துக்காவுக்கு துக்க நிகழ்ச்சிக்கு சென்ற போது விபத்து நிகழ்ந்துள்ளது. இந்த விபத்தில் பத்து பேர் ஆபத்தான நிலையில் மீட்கப்பட்டுள்ளனர். மேலும் பலர் இன்னும் தேடப்பட்டு வருகின்றனர்.

படகு அதிக சுமையுடன் இருந்ததால், மரத்தின் அடிப்பகுதியில் மோதியதால் படகு கவிழ்ந்ததின் விபத்திற்கான காரணம் என்பது விசாரணையில் தெரியவந்தது.. (ஐ)



## சீனாவில் சொகுசு கப்பலில் பயணித்த உலக தலைவர்களின் மனைவியர்



சீனாவில் நடந்த ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் மாநாட்டில், பல நாட்டுத் தலைவர்கள் விவாதித்த அதே நேரத்தில், அவர்களுடைய மனைவியர், சொகுசு கப்பலில் பயணித்து, சீனாவின் பாரம்பரிய கலாசாரத்தை நேரில் பார்த்து அனுபவித்தனர்.

நம் அண்டை நாடான சீனாவில், ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் மாநாடு, சமீபத்தில் நடந்தது.

இதைத் தொடர்ந்து, இரண்டாம் உலகப் போரில் வெற்றி பெற்றதன் வெற்றி தினம் நேற்று கொண்டாடப்பட்டது.

இந்த இரு நிகழ்ச்சிகளில், பல நாட்டுத்தலைவர்கள் பங்கேற்றனர். மாநாட்டில் பேசியதுடன், இரு தரப்பு உறவுகள் குறித்து பல நாட்டுத் தலைவர்கள் விவாதித்தனர்.

இந்த நேரத்தில், வெளிநாட்டுத் தலைவர்களின் மனைவியரை, சீன அதிபர் ஷீ ஜின்பிங்கின் மனைவி பெங் லியுவான் சந்தித்தார். குழுவாக புகைப்படம் எடுத்துக் கொண்டு, அளவளாவினர்.

இதைத் தொடர்ந்து, தியாஜின் நகரின் வரலாறு மற்றும் கலாசாரத்தை விளக்கும் வகையில், ஹாயே நதியில், சொகுசு கப்பலில் அவர்கள் பயணம் செய்தனர். (ஐ)






## 'எங்களிடம் அசுர பலம் இருக்கு' அணிவகுத்து காட்டியது சீனா

*இரண்டாம் உலகப்போர் முடிவுக்கு வந்ததன் 80 ஆண்டு நிறைவை ஒட்டி, சீன அரசு 12,000 ராணுவ வீரர்கள், அணு ஆயுத ஏவுகணைகள், டாங்கிகள், விமானங்கள் என முப்படைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் பிரமாண்டமான ராணுவ பேரணியை நேற்று நடத்தி, உலக வல்லரசுகளை திரும்பி பார்க்க வைத்துள்ளது.*

*இரண்டாம் உலகப் போர், 1939 செப்.,1ல் துவங்கி, 1945 செப்., 2ல் ஜப்பான் சரணடைந்ததுடன் முடிவுக்கு வந்தது. இதையடுத்து, செப்., 3ம் தேதியை வெற்றி தினம் என்ற பெயரில் சீனா ஆண்டுதோறும் கொண்டாடி வருகிறது. இந்நிலையில், 8-0வது வெற்றி தினத்தையொட்டி, நம் அண்டை நாடான சீனாவின் பீஜிங்கில் பெரிய அளவிலான ராணுவ அணிவகுப்புன் நேற்று நடந்தது. இதுபோன்ற பிரமாண்ட பேரணி, 10 ஆண்டுக்கு முன் நடத்தப்பட்டது.*

*இரண்டாம் உலகப் போர் சீனாவில், இரண்டாவது சீனா - ஜப்பானிய போர் என்று அழைக்கப்படுகிறது. சீனாவின் கண்ணோட்டத்தில், இந்தப் போரில் அவர்கள் ஜப்பானிய ஆக்கிரமிப்புக்கு எதிராக வெற்றி பெற்றதாக கருதுகின்றனர். நேற்றைய ராணுவ அணிவகுப்பு அந்த வெற்றியை நினைவு கூர்வதற்காகவும், சீனாவின் தற்போதைய ராணுவ வலிமையை வெளிப்படுத்துவதற்காகவும் நடத்தப்பட்டது.* **Image** 1464706 *இந்த அணிவகுப்புக்கு சீனாவின் அதிபர் ஷீ ஜின்பிங் தலைமை தாங்கினார். இவரே மக்கள் விடுதலை ராணுவத்தின் தலைவராகவும் உள்ளார். இந்த நிகழ்ச்சியில் அதிபர் ஜின்பிங் உடன், ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின், வடகொரிய அதிபர் கிம் ஜாங் உன் உட்பட 25 நாடுகளின் தலைவர்கள் பங்கேற்றனர்.*

*பீஜிங்கில் உள்ள தியானமென் சதுக்கத்தில் இருந்து ராணுவ அணிவகுப்பு துவங்கியது. இதை, அதிபர் ஷீ ஜின்பிங், 'ஹாங்சி எல் - 5 லிமூசின்' எனப்படும் சீன அரசு நிகழ்ச்சிகளில் பாரம்பரியமாக பயன்படுத்தும் திறந்த நிலை காரில் சென்று பார்வையிட்டார்.*

*சீனாவின் அதிநவீன ஆயுதங்கள் இந்த அணிவகுப்பில் காட்சிப்படுத்தப்பட்டன. ஹைப்பர்சோனிக் எனப்படும் ஒலியின் வேகத்தில் செல்லக்கூடிய புதிய தலைமுறை ஏவுகணைகள், பாலிஸ்டிக் ஏவுகணைகள், நீர்மூழ்கி ட்ரோன்கள், போர் விமானங்கள், விமானங்கள் செயல்பாட்டை தடுக்கும் கருவிகள் உள்ளிட்டவை இதில் இடம்பெற்றன. அத்துடன் 12,000 ராணுவ வீரர்களும் அணிவகுத்து சென்றனர். விமானப்படை சார்பில் சாகசங்கள் நிகழ்த்தப்பட்டன. போர் ஹெலிகாப்டர்கள் 'நீதி வெல்லும் அமைதி வெல்லும் மக்கள் வெல்வர்' என்ற வாசகங்கள் அடங்கிய பேனர்களை பறக்கவிட்டப்படி சென்றன. மூன்று கி.மீ., தொலைவுக்கு 70 நிமிடங்கள் நடந்த இந்த அணிவகுப்புக்காக பீஜிங்கில் பலத்த பாதுகாப்பு போடப்பட்டது. இந்த நிகழ்ச்சியில், 50,000 பேர் பங்கேற்றனர். அதே நேரத்தில், பொது மக்கள் அனுமதிக்கப்படவில்லை.*

*ராணுவ அணிவகுப்புக்கு பின் உலக நாடுகளின் தலைவர்களுடன் நடந்த விருந்து நிகழ்ச்சியில் அதிபர் ஷீ ஜின்பிங் பேசியதாவது:*

*உலகம் ஒருபோதும் காட்டாட்சி சட்டத்திற்கு திரும்பக் கூடாது. அது பலவீனமானவர்களை வலிமையானவர்கள் சுரண்டும் இடம். சீன மக்களின் எழுச்சியை யாராலும் தடுக்கவும் முடியாது அழிக்கவும் முடியாது. நாங்கள் ஒருபோதும் பயப்படமாட்டோம். உலகை வழி நடத்தும் நாடுகளில் சீனாவும் ஒன்று.*

*இன்று, மனிதகுலம் அமைதி அல்லது போர் உரையாடல் அல்லது மோதல் வெற்றி அல்லது வீழ்ச்சி என்ற தேர்வை எதிர்கொண்டுள்ளது. மனித நாகரிகத்தின் அமைதியான வளர்ச்சியின் உன்னத இலக்கு வெற்றி பெற வேண்டும். ஒரு நாடு இன்னொரு நாட்டின் மீது ஆதிக்கம் செலுத்துவதற்கு எதிராகவும் ஒன்றுபட அழைப்பு விடுக்கிறேன். இவ்வாறு அவர் பேசினார். (ஐ)*

## பஸ் விபத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பஸ் சாரதி உள்ளிட்ட 6 ஆண்களும் அடங்குகின்றனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். அவர்களில் 2 குழந்தைகளும் அடங்குகின்றனர்.

11 ஆண்களும் 7 பெண்களும் காயமடைந்த நிலையில் பதுளை மாவட்ட போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்களில் 5 குழந்தைகளும் அடங்குகின்றனர்.

சுற்றுலா சென்று திரும்பிக் கொண்டிருந்தவர்களை ஏற்றிச் சென்ற பஸ் 200 மீற்றர் பள்ளத் தாக்கில் வீழ்ந்ததால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். பஸ் எதிரே வந்த ஜீப்புடன் மோதியதுடன், வீதிப் பாதுகாப்பு வேலியையும் இடித்துச் சென்றுள்ளது.

விபத்தில் சிக்கிய பஸ் தங்காலை நகர சபை பணியாளர்கள் குழுவை ஏற்றிச் சென்றுள்ளது என்று தெரியவந்துள்ளது.

பொலிஸார், இராணுவத்தினர், விமானப் படையினர், தீயணைப்புத் திணைக்களத்தினர் மற்றும் அந்தப் பகுதி மக்கள் இணைந்து விபத்தில் சிக்கியவர்ளை மீட்டனர்.

விபத்து நடந்த நேரத்தில் பஸ்ஸில் 35 இற்கும் மேற்பட்டோர் இருந்தனர் எனக் கூறப்படுகின்றது.

பஸ் விபத்து நடந்த இடத்தில் இருந்த மோசமான நிலைமைகள் காரணமாக அந்தக் குழுவை மீட்கப் பெரும் முயற்சி எடுக்க வேண்டியிருந்தது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

## பிரேக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விபத்து ஏற்படுவதற்குச் சில நிமிடங்களுக்கு முன் பஸ் சாரதி "பஸ்ஸில் பிரேக் செயலிழந்துள்ளது" எனக் கூறினார் என்று அதிர்ச்சித் தகவலை வெளியிட்டுள்ளார்.

காயமடைந்த அந்த நபர், தான் சாரதி மற்றும் நடத்துனருடன் பேசிக் கொண்டிருந்ததாகவும், அப்போது சாரதி ஒரு வளைவில் திரும்பும்போது பஸ்ஸின் பிரேக் செயலிழந்ததாகத் தெரிவித்ததாகவும் கூறினார். ஆனால், சாரதியின் இந்தக் கருத்தை நடத்துனரும், அருகில் இருந்த மற்ற பயணிகளும் சிரித்துக்கொண்டு கேலி செய்ததாகவும், அதனை அவர்கள் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை என்றும் அவர் கூறினார்.

"இரண்டாவது வளைவில் திரும்பும்போது தான் பஸ்ஸின் பிரேக் பிடிக்கவில்லை என்பதை நாங்கள் உணர்ந்தோம். அதன் பின்னர் பஸ் எதிர்திசையில் வந்த வாகனத்துடன் மோதி, பள்ளத்தில் கவிழ்ந்தது. நான் சுமார் ஒரு மணி நேரம் சுயநினைவின்றி இருந்தேன். ஒரு சிறு பிள்ளை அழுவதைக் கேட்டு கண் விழித்தேன். என்னால் நகர முடியவில்லை. பின்னர் மீட்புப் படையினர் வந்து எங்களை மீட்டனர்." - என்றும் அவர் தெரிவித்தார்.

பதுளை போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் இந்த நபர் இது தொடர்பில் ஊடகங்களிடம் மேலும் தெரிவிக்கையில்,

"நாம் தங்காலையில் இருந்து வந்தோம். அதிகாலை 3 மணிக்கு நுவரெலியாவுக்குச் சுற்றுலா செல்லவிருந்தோம். எனது அம்மா தொழில் புரியும் அலுவலகத்தின் ஊடாக இந்தச் சுற்றுலா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதிகாலை பயணத்தைத் தொடங்கி மாலை வேளையில் எல்ல பகுதியை அண்மித்தோம். அந்தப் பகுதியில் ஒரு பாதை வளைவில் சென்று கொண்டிருந்த போது, 'பிரேக் இல்லை' எனச் சாரதி கூறினார்.

அப்போது நான் சாரதி மற்றும் நடத்துனரிடம் பேசிக் கொண்டிருந்தேன். மூவரும் பேசிக் கொண்டிருந்த போதே பஸ்ஸின் சாரதி அவ்வாறு கூறினார். அவர் கூறியதைக் கேட்டு நடத்துனரும் ஏனையோரும் சிரித்தனர். பொய் கூறாதீர்கள் எனக் கூறியே அவர்கள் சிரித்தனர். அந்த வளைவைத் தாண்டி இரண்டாவது வளைவை அண்மித்த போதே 'உண்மையிலேயே பிரேக் இல்லை' என்று சாரதி கூறினார்.

அதன் பின்னரே சாரதி கூறியது உண்மை எனத் தெரிந்தது. இதன்போது பஸ்ஸ/க்கு முன்னாள் வந்த வாகனமொன்றின் மீது மோதிய பின்னரே விபத்து இடம்பெற்றது. அது எந்த வாகனம் என்று எனக்கு நினைவில் இல்லை. பஸ் பள்ளத்தில் வீழ்ந்தபோது அதுவே எனது இறுதி நொடி என்று தோன்றியது. அதன் பினனர் நான் சுய நினைவை இழந்தேன்.

பின்னர் மயக்கம் தெளிந்த பின்னரே உயிருடன் இருப்பதை உணர்ந்தேன். வீழ்ந்து சுமார் ஒரு மணித்தியாலம் நான் சுய நினைவில் இல்லை. அதன் பின்னர் சிறு பிள்ளையொன்றின் சத்தம் கேட்ட போதே எழுந்தேன். எனினும், அந்தப் பிள்ளையைக் கைகளில் தூக்கிக் கொண்டு என்னால் எழும்ப முடியவில்லை. அதனால் இங்கு ஒரு சிறு பிள்ளை இருப்பதாகக் கூச்சலிட்டேன். அதன் பின்னரே அந்தப் பிள்ளையுடன் நானும் மீட்கப்பட்டேன்.

ஏதோ ஒரு ஜன்னல் ஊடாக நான் வெளியில் வீசப்பட்டேன். ஆனால், அது முன்னாலிருந்த ஜன்னலா அல்லது பின்னாலிருந்த ஜன்னலா என்பது நினைவில்லை. ஜன்னல் வழியாக வீசப்பட்டு மரமொன்றில் சிக்கி கீழே வீழ்ந்தேன். பஸ் பிரண்டு பிரண்டு துண்டு துண்டாக கீழே வீழ்ந்தது." - என்றார்.

இதேவேளை, பஸ்ஸின் நடத்துனர் இது தொடர்பில் தெரிவிக்கையில், "சாதாரண வேகத்திலேயே வந்து கொண்டிருந்தோம். வாகனமொன்றின் மீது மோதிய பின்னரே பஸ் கவிழ்ந்தது. பிரேக் இல்லை எனச் சாரதி கூறினார். அதிக வேகத்தில் வரவில்லை. விபத்து இடம்பெற்ற பின்னர் எனக்கு சுய நினைவில்லை. வைத்தியசாலைக்கு அழைத்து வரப்பட்ட பின்னரே நினைவு திரும்பியது." - என்றார்.

இந்நிலையில் விபத்து குறித்த மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## எல்ல..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

"துயரத்தில் இருக்கும் குடும்பத்தினருக்கும் அன்புக்குரியவர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கின்றேன். காயமடைந்த அனைவரும் விரைவில் குணமடைய வேண்டுகின்றேன். இந்தக் கடினமான தருணத்தில் நாட்டின் எண்ணங்களும் பிரார்த்தனைகளும் உங்களுடன் இருக்கும்." - என்று அவர் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

## பஸ் விபத்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விரைவில் குணமடையப் பிரார்த்திக்கிறேன் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

எல்ல பகுதியில் இடம்பெற்ற பஸ் விபத்து தொடர்பில் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியிலேயே எதிர்க்கட்சித் தலைவர் இதனைக் கூறியுள்ளார்.

அதில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

"நேற்று வியாழக்கிழமை இரவு எல்ல பகுதியில் நடந்த துயரமான கோர விபத்தில் உயிரிழந்த தங்காலை நகர சபை செயலாளர் உட்பட சகலரினதும் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு, காயமடைந்த அனைவரும் விரைவில் குணமடையப் பிரார்த்திக கின்றேன்.

அதேநேரத்தில், இந்தத் துரதிர்ஷ்டவசமான சம்பவத்தைத் தொடர்ந்து பஸ்ஸில் பயணித்த பயணிகளின் உயி ரைக் காப்பாற்றுவதற்கு விரைந்து செயற்பட்ட பொலிஸார் உட்பட பாதுகாப்புப் படையினருக்கும், மீட்பு நடவடிக்கைகளில் ஈடுபட்ட குழுக்களுக்கும், சுகாதாரப் பணியாளர்களுக்கும், எல்ல நகர மக்களுக்கும் எமது மரியாதையையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

துயர் நிகழும் சந்தர்ப்பங்களில் மற்றவர்களுக்கு உதவுவதில் நாம் கொண்டுள்ள உன்னத நற்பண்பை மீண்டும் ஒருமுறை நிரூபிக்கக் கிடைத்த சந்தர்ப்பமாக நான் இதைப் பார்க்கின்றேன்.

இந்தத் துயர் சம்பவத்தால் இறந்தவர்கள், காயமடைந்தவர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்கள், அவர்களினது உறவினர்களுடன் மற்றும் தங்காலை மாநகர சபையின் சகலருடனும் இந்தத் துயரமான நேரத்தில், துக்கத்தைப் பகிர்ந்து கொள்வதில் அனைத்து இலங்கையர்களும் ஒன்றுபடுவார்கள் என்று நான் நம்புகின்றேன்.

இதுபோன்ற பல துரதிர்ஷ்டவசமான வாகன விபத துகள் தொடர்பான சம்பவங்களை இந்த வருடம் கடந்து போன காலங்களில் நாம் கேள்விப்பட்டிருக்கின் றோம்.

இது போன்ற சம்பவங்களைக் குறைத்துக் கொள்வதற்கு எடுக்க முடியுமான சாத்தியமான சகல நடவடிக்கைகளையும், கொள்கை ரீதியிலான தீர்மானங்களையும் எடுக்க நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் மக்கள் பிரதிநிதிகளாகிய நாம் அனைவரும் தயாராக இருக்கின்றோம் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

இறுதியாக, இந்தத் துரதிர்ஷ்டவசமான சம்பவத்தில் உயிரிழந்த அனைவருக்கும் மீண்டும் ஒருமுறை நான் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றேன். காயமடைந்த சகலரும் விரைவாகக் குணமடையவும் பிரார்த்திக்கின்றேன்." - என்றார்.

## காசியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதனடிப்படையில் நேற்று வியாழக்கிழமை காசி உட்பட இந்தியாவின் பல தீர்த்தங்களில் இருந்து புனித நீர் எடுத்து வரப்பட்டு விடுதலை நீர் சேகரிப்பு பானையில் சேமிக்கப்பட்டது.

இந்த நீர் சேகரிப்பு நிகழ்வானது சிவகுரு ஆதீனத்தில் நடைபெற்றது.

இந்த விடுதலை நீர் சேகரிப்பு நிகழ்வில் தவத்திரு வேலன் சுவாமிகள், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கத்தினர், அரசியல் கைதிகளின் உறவுகள், குரல் அற்றவர்களின் குரல் அமைப்பினர், தென்னிந்தியாவில் இருந்து வருகை தந்த உறவுகள், யாழ்ப்பாணம் மற்றும் கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# பெக்கோ சமனின் மனைவி குழந்தை தொடர்பில் எடுத்துள்ள தீர்மானம்!

இந்தோனேசியாவில் கைது செய்யப்பட்ட குற்ற கும்பலைச் சேர்ந்த பெக்கோ சமனின் மனைவி ஷ ாதிகா லக்ஷனியை எதிர்வரும் 18ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பணமோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் பெக்கோ சமனின் மனைவி ஷாதிகா லக்ஷனி கைது செய்யப்பட்டார்.

இது தொடர்பான வழக்கு கொழும்பு பிரதான நீதவான் அசங்க எஸ்.போதரகம முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன் போதே ஷாதிகா லக்ஷனியை எதிர்வரும் 18ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதவான் உத்தரவிட்டார்.

இந்த நிலையில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திலிருந்து தனது மூன்று வயது மகளை நீதிமன்றத்திற்கு அழைத்து வந்த அவர், நீதிமன்றத்தால் விசாரிக்கப்பட்டபோது, தனது குழந்தையை பெற்றோரிடம் ஒப்படைப்பதாக தெரிவித்துள்ளார்.

# பாதாள உலக கும்பல் கைதால் கவலையடைந்துள்ள நாமல்

*இந்தோனேசியாவிலிருந்துபாதாள உலக செயற்பாடுகளுடன் தொடர்புடையவர்கள் கைது செய்யப்பட்டு நாட்டுக்கு அழைத்து வரப்பட்டமையை சாதாரண விடயமல்ல என்றும், இந்த விடயம் தொடர்பில் நாமல் ராஜபக்ச ஏன் கலவரமடைகின்றார் என்பது எமக்கு தெரியும் எனவும் அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.*

*அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,*

*இந்தோனேசியாவிலிருந்து பாதாள உலக செயற்பாடுகளுடன் தொடர்புடையவர்கள் கைது செய்யப்பட்டு நாட்டுக்கு அழைத்து வரப்பட்டமையை சாதாரணமாகக் கருத வேண்டாம்.*

*எமது குற்றப்புலனாய்வுப் பிரிவினர், இரு நாட்டு பொலிஸார், சர்வதேச பொலிஸ், இந்திய புலனாய்வுப் பிரிவினர் உள்ளிட்ட பல தரப்பினரின் அர்ப்பணிப்பான சேவைக்கமையவே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.*

*இந்த ஐவரையும் நாட்டுக்கு அழைத்து வருவதென்பது சாதாரண விடயமல்ல. இதனை விட பாரிய குற்றங்கள் தொடர்பில் அறிந்திருப்பதால் நாமல் ராஜபக்சவுக்கு இது சாதாரண விடயமாக இருக்கலாம்.*

*எனவே இது அவர்களுக்கு சிறிய விடயமாக இருந்தாலும் நாட்டுக்கு பெரிய விடயமாகும். அடுத்த கட்ட விசாரணைகளில் வெளியாகவிருக்கும் தகவல்களில் இதனுடன் தொடர்புடைய அரசியல்வாதிகள் உட்பட பலரது தகவல்களும் வெளியாகும்.*

*படிப்படியாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு அதற்கமைய சட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.*

*இதன்படி விசாரணைகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் குற்றப்புலனாய்வு திணைக்களமும், பொலிஸாரும் மேலதிக தகவல்களை ஊடகங்களுக்கு வழங்குவர்.*

*அத்தோடு, மக்களின் பாதுகாப்பிற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகளை சிறிதாக எண்ண வேண்டாம் என்றும், சற்று முற்போக்காக சிந்திக்குமாறும் கேட்டுக் கொள்கின்றோம்.*

*அண்மையில் ஊடக அடையாள அட்டையைப் பயன்படுத்தி கொலை முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே சிலரது தனிப்பட்ட தகவல்களை பாதுகாக்க வேண்டியது அவசியமாகும்.*

*இந்த விடயத்தில் நாமல் எதற்காக இந்தளவுக்கு கலவரமடைந்தார் என்பது எமக்கு தெரியும். அத்தோடு, குற்றங்களுடன் தொடர்பற்ற எவரும் வீணாகக் கலவரமடையத் தேவையில்லை" என்றார்.*







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 05.09.2025 வெளியிடப்பெற்றது.